1974 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 691, 692 ஆகியவைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகின்றன.

மதுரை மில்லுக்கருகில் மேம்பாலம்.

*693 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தம் மதுரை மில்லுக்கருகில் கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பால வேலையின் மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) அவ்வேலை எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 32·30 இலட்சமென மதிப்பிடப்படுகிறது. (இ) விரைவில் முடிவுறும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, பழங்காநத்தத்திற்கு அருகில் கட்டப்பட்டிருக்கிற ரயில்வே மேம்பாலத்தின் கீழே காலியிடம் இருக்கிற காரணத்தால், அந்த இடங்களைத் தொழில் நடத்தக் கேட்பவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மாதிரி மேம்பாலம் கட்டும்போது, அதற்கு மாற்றுப் பாலம் கட்டுகிறார்கள், அப்படிக் கட்டாமல் இருந்தால் அந்த இடத்தைக் கடந்து நடந்து செல்ல முடியவில்லை. அங்கே போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, பாலம் கட்டும்போதே தனியாக ஒரு மாற்றுப்பாதை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எங்கே பாலம் கட்டுவதாக இருந்தாலும் மாற்றுப் பாலம் கட்டுவதற்கும் சேர்த்துத்தான் மதிப்பீட்டில்

பணம் ஒதுக்குகிறோம். அதைச் செவ்வனே செய்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். செய்யவில்லை என்று தெரிவித்தால் அது குறித்து கவனிக்கலாம்.

கொந்தகை கண்மாய் கால்வாய்.

694 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை கண்மாய் கால்வாய் மராமத்துச் செய்யாமல் மேடு பாய்ந் திருப்பது உண்மையா ?

(இ) மராமத்துச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொந்தகைக் கண்மாயின் வரத்துக் கால்வாய் சிறிது மேடு பாய்ந்திருந்தது. கால்வாய் மராமத்து குடி மராமத்து திட்டத்தின்கீழ் செய்ய வேண்டியதால், ஆயக்கட்டுதாரர் களே, மேடு பாய்ந்திருந்ததைச் சரி செய்து கொள்கிறார்கள்.

(இ) இந்தக் கால்வாயை மராமத்து செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அந்தக் கொந்தகை கால்வாய் ஏறத்தாழ 3,000 ஏக்கருக்குத் தண்ணீர் தேக்கிவைக்கும் கண்மாய். அந்தக் கால்வாயைச் சரி செய்யாததால் 7 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆகவே, அந்தக் கொந்த கைக் கால்வாயை வெட்டிக்கொடுத்து, அந்தப் பகுதி விவசாயிகளைக் காப்பாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கண்மாய் ஆயக்கட்டின்கீழ் உள்ள நிலம் 3,000 ஏக்கர் என்று சொன்னார் கள். அது தவறு. 1,900 ஏக்கர் தான். இது குடிமராமத்தின்கீழ் செப்பனிட வேண்டியதொன்றாகும். இந்தக் குடிமராமத்து விஷயத்தில் அர சாங்கம் புதிய திட்டம் ஒன்று இருப்பதால், அதன்படி பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் நன்மைதரும் வகையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்.